[illegible]

4

TB
031,6x
N76
184403

754

[A]pproved by the Text Book Committee (Vide Fort St. George Gazette)
Part 1-B. Page 203 dated 19th May 1925.

# நற்புதல்வர்கள்.

"IDEAL BOYS."

தமிழ்ப்பண்டிதர்
இ. ஸ்ரீ. கோவிந்தய்யங்கார் அவர்கள்
இயற்றியது.

OFFICE OF THE REGIS[TRAR]
14 AUG 1926
MADRAS

... சிதம்பர முதலியார் பிரதர்ஸ்
...ர்ஸ் அண்டு பப்ளிஷர்ஸ்,
...ரஸ் & மதுரை.

[Price As. 4.

1926

TB
031,6x
N26
184403

துரைத்தனத்தார் அங்கீகரித்தது.

OFFICE OF THE REGISTRAR
14 AUG 1926
MADRAS

# நற்புதல்வர்கள்.

## IDEAL BOYS

3192
8F4813

தமிழ்ப்பண்டிதர்
இ. ஸ்ரீ. கோவிந்தய்யங்கார்
இயற்றியது.

(இரண்டாம்பதிப்பு)

சென்னை
பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்
அவர்களால்
பிரசுரிக்கப்பெற்றது.

[ரிஜிஸ்டர் செய்தது] [விலை அணா 4

PRINTED AT THE

MEENAKSHI VILAS PRESS MADURA.

1926.

தமிழ்நாடு ஆவணக் காப்பகத் நூலகம்
சென்னை-600 008

OFFICE OF THE REGISTRA[R]
14 AUG 1926
MADRAS

## உள்ளுறை.


| | | பக்கம். |
|---|---|---|
| | மேற்கோள்கள் ... ... | 1 |
| 1 | ஸ்ரீராமன் ... ... | 3 |
| 2 | துருவன் ... ... | 12 |
| 3 | பரசுராமன் ... ... | 20 |
| 4 | காங்கேயன் ... ... | 23 |
| 5 | பூரு ... ... | 30 |
| 6 | மார்க்கண்டேயன் ... ... | 33 |
| 7 | மேகநாதன் ... ... | 39 |
| 8 | வீதிவிடங்கன் ... ... | 44 |
| 9 | பிரஹ்லாதன் ... ... | 48 |

‘ மேற்கோள்கள் ’

## புதல்வரைப்பெறுதல்

---

‘ திருக்குறள் ’

1. பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற.

2. எழுபிறப்பும் தீயவை தீண்டா பழி பிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்

3. தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொருள்
தந்தம் வினையான் வரும்.

4. அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

5. மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

6. குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச் சொற் கேளாதவர்.

7. தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

8. தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.

9. ஈன்ற பொழுதிற்பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

10. மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனும் சொல்.

## 'நள வெண்பா'

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ-இன்னடிசிற்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்.

## 'விவேக சிந்தாமணி'

1. சந்திரனில்லா வானந் தாமரை யில்லாப் பொய்கை
மந்திரி யில்லா வேந்தன் மதகரி யில்லாச்சேனை
சுந்தரப்புலவ ரில்லாத் தொல்சபை சுதரில் வாழ்வு
தந்திகளில்லா வீணை தயையில்லா அறத்தைப்போலாம்

2. அரசும் குருவும் அன்னையும் மற்று அன்பார்
பிதாவும் தம்முன்னும்
பொருவும் குரவர் இவரைவர் பொலிவார்
தேவரென மதித்து
வரு நாடோறும் வைகறையில் வணங்கி
யெழுதல் மரபெனவே'
அருநல் லொழுக்க மறைந்திடு நூல் அனைத்து
முரைக்கு மாலன்றே.

## நீதிநெறி விளக்கம்.

கற்புடுத் தன்பு முடித்து நாண் மெய்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு—மக்கட்பே
றென்பதோர் செல்வமு முண்டாயி னில்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 AUG 1926
MADRAS

# நற்புதல்வர்கள்.

## ஸ்ரீராமன்.

புண்ய பூமியாக உலகத்தாரால் நாளும் கொண்டாடப்படுவது, நமது பாரத தேசம். அதில் முன்காலத்தில் சிறப்புற்றோங்கிய நாடுகள் பல வற்றுள் தலைமை பெற்றது கோசல நாடு. இதன் தலைநகர் பல வலிகளுடனும் வளங்களுடனும் சிறப்புற்று விளங்கிய அயோத்தி என்னும் அணி நகரம்.

இதை தசரதர் என்னும் ஓர் அரசர் ஆண்டு வந்தார். அவருக்கு மனைவிகள் மூவர். அவர்களது பெயர் முறையே கோசலை, கைகேயி, சுமித்திரை என்பன. தசரதர் இவர்களுடன் நெடு நாளாய் இல்லறம் நடத்தியும் புத்திரப்பேற்றையடைந்தாரில்லை.

ஆதலால் அவர் பெரிதும் வருந்தி தம் மந்திரிகளிடம் ஓர் நாள் தம் குறையைப்பற்றிக்கூறிக் கொண்டிருந்தார்: அக்காலை அவருக்கு குருவும் முனிபுங்கவருமாகிய வசிஷ்டர் எழுந்து தசரதரை நோக்கி "அரசே! புத்திரகாமேஷ்டி என்

னும் வேள்வியைச் செய்தால் உனக்குப் புதல்வ ருதிப்பர்” என்று கூறினர். உடனே தசரதர் உவகை பூத்து யாகத்திற்குரிய சாமக்ரியைகள் யாவற்றையுந் தயாரித்து வசிஷ்டரிடம் கூறினர்.

யாகம் நடந்தது. அப்பொழுது அங்கிரு ந்த யாககுண்டத்தினின்றும் இருண்டமேனியும் தெருண்ட பார்வையும் உடையனுவனுய் ஒரு திவ்விய புருஷன் அமிர்தம்கொண்ட ஓர் பொற் கலசத்துடன் வெளிப் போந்தான். அவன் தசர தரை யடைந்து அக்கலசத்தை யவரிடம் கொடு த்துப் பின் தான் அவ்வக்கினியிலேயே மூழ்கி மறைந்தான்.

கலசத்தைப் பெற்ற அரசர் அதிலுள்ள அ மிர்தத்தைத் தன் மனைவியர் மூவர்க்கும் பகிர்ந்து கொடுத்து, மீதியிருந்ததையும் கீழே சிந்தியதை யும் சுமித்திரைக்குக் கொடுத்தார். கொஞ்சநாட்க ளில் தசரதருக்கு நான்குபுதல்வர்கள் உதித்தனர். இராமன் லக்ஷ்மணன் பரதன் சத்துருக்னன் என் பன அவர்களது பெயர்கள். ராமன் கோசலை பிள்ளை. பரதன் கைகேயின் குமாரர். லக்ஷ்மண னும் சத்ருக்னனும் சுமித்திரையின் புதல்வர்.

இவர்கள் நால்வரும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய்வளர்ந்துவந்தனர்.

குமாரர்க்கு ஐந்து வயதானதும் அரசர் தன் குழந்தைகளுக்கு வித்தியாப்பியாசம் செய்விக்க அவர்களை வசிஷ்டரிடம் ஒப்புவித்தார்.

ஒருநாள் அரசரவைக்கு விசுவாமித்திரர் என்னும் முனிபுங்கவர் வந்து, தானியற்றும் யாகத்தைக் காப்பதற்காக தசரதரது குமாரருள் ஸ்ரீராமனையாஜித்தார். தசரதர் புத்திரனைப்பிரிய மனமில்லாததனால் தாமே வந்து வேள்வியைக் காப்பதாகக் கூறினார். ஆனால் விசுவாமித்திரர் இராமரையே கோரி நின்றார்.

தசரதருக்கு மறுக்க முடியவில்லை, உடனே குழந்தையை விசுவாமித்திரரிடம் "இவர்க்கு தந்தையும் தனித்தாயும் நீயே" என்று கூறி ஒப்புவித்தார். லக்ஷ்மணன் ராமனைவிட்டு பிரிவதில்லையாதலால் தானும் இராமனுடன் புறப்படத்தயாரானான். இராம லக்ஷ்மணர்களை அழைத்துக்கொண்டு விசுவாமித்திரர் யாகசாலையை நோக்கிச் சென்றார்.

விசுவாமித்திரர் யாகசாலையையடைந்ததும் இராம லக்ஷ்மணர்களைக் காவல் வைத்துவிட்டு பல முனிவர்களுடன் யாகத்தை நடத்தினார். அப்பொழுது யாகத்தைக்கெடுக்க அநேக அரக்கர்கள் வந்தனர். அவர்கள் அனைவரையும் இராமர்

கொன்ருர். பின், வேள்வி யாதொரு இடையூறு மின்றி முடிந்தது.

பின், விசுவாமித்திரர் இராமனையும் தம்பியையும் வாழ்த்தி அவர்களை அழைத்துக்கொண்டு மிதிலை யென்னும் நகருக்குச்சென்ருர்.

மிதிலை என்பது விதேகம் என்னும் நாட்டின் ராஜதானி. குபேரனது தலைநகராகிய அழகாபுரியோ அல்லது இந்திரனது தலைநகராகிய அமராவதியோ என்று கொண்டாடத்தக்க அழகு வாய்ந்தது. இந்நகரினை ஆண்டவன் ஜனகன் என்னும் மன்னன். இவன் பேரும் புகழும் பெற்றவன். இவனுக்கு இரண்டு புத்திரிகள் உண்டு. சீதை என்பவள் மூத்தவள்; எல்லையற்ற அழகுடையவள்; நற்குணக்குன்று.

இவளுக்குத் தக்க மணுளனை மணம் புரிவிக்க விரும்பிய ஜனகன், ஒரு ஏற்பாடு செய்தான். சிவபெருமான் கையாண்ட ஒரு பெரியவில் அவனிடம் இருந்தது. அவ்வில்லை எடுத்து வளைப்பவரே சீதைக்குக் கணவராதற்கு உரியவரென்று அவன் எங்கும் பறை சாற்றுவித்தான். பல மன்னர்களும் சீதையை மணக்கவந்து வில்லைத்தூக்கவும் முடியாமையால் வெட்கமடைந்து திரும்பினர்.

மிதிலையை யடைந்த முனிவர் தசரத புத்திரரை அழைத்துக்கொண்டு ஜனகன் சபைக்கு வந்தார். வந்ததும் அவர் பாலர்களது குலமுறையைக்கூறி, வில்லைவளைத்து சீதையைமணம் புரிய அவர்கள் வந்ததாகவும் கூறினர்.

உடனே, ஜனகன், வில்லைச் சபைக்குக் கொண்டுவருமாறு பலமுள்ள அநேக வீரர்களை அனுப்பினர். அநேகம் ஆயிரக்கணக்கான வீரர்கள் அப்பெரும்வில்லை ஓர் இருப்புவண்டியில்வைத்து ராஜசபைக்குக் கொண்டுவந்தனர். வில் வந்ததும் இராமர் அதை இலகுவாய் ஒரு கையினுல் எடுத்து நாணேற்ற வளைக்க, அவ்வில் இரண்டு துண்டுகளாய் ஒடிந்து விழுந்தது. அப்பொழுது எல்லோரும் இராமரது திறமையை வியந்தனர்.

இச்செய்தி தசரதருக்கு எட்டஅவரும் தமது பந்து மித்திரர்களுடனும் பரிவாரங்களுடனும் மிதிலைவந்து சேர்ந்தார். ஜனக மஹாராஜனும் தன் மூத்த புதல்வி சீதையை நல்லதோர் சுப வேளையில் ஸ்ரீராமருக்கு மணம்புரிவித்தார். தசரதரது மற்றைக் குமாரர்களுக்கும் அதே முகூர்த்தத்தில் திருமணம் நடந்தது. பின் யாவரும் மகிழ்ந்து அயோத்திக்குச் சென்ருர்கள்.

இராமருக்குத் தக்கவயது வந்தது. தசரதருக்கு வயதாய்விட்டபடியால் அவர் இராஜ்யபாரத்தை இராமருக்குக்கொடுக்கவிரும்பினர். அதை அவர் மந்திரிகளிடம் கூற அவர்களும் அதற்கு இசைந்தனர்.

இச்செய்தி அரசரது இரண்டாம் மனைவியாகிய கைகேயிக்கு எட்டிற்று. அவள் மிகவும் நல்லவள்; கற்பிற்கரசி. தன்பிள்ளை பரதனிடம் அவள் கொண்டிருந்த அன்பைப்போல் பன்மடங்கு கௌசலை பிள்ளையாகிய இராமர்மீது கொண்டிருந்தாள். ஆதலால் ஸ்ரீராமருக்கு பட்டாபிஷேகம் என்பதைக்கேட்டது முதல் அவள் அளவற்ற ஆனந்தம் கொண்டிருந்தாள். அவள் இராமருக்கு பட்டாபிஷேகம் என்று தன்னிடம் தெரிவித்த கூனி என்னும் தாதிக்கு ஒப்புயர்வற்ற ஓர் முத்துமாலையை சந்தோஷத்தால் இனமாக அளித்தாள்.

கூனி மிகப் பொல்லாதவள். ஸ்ரீராமர் குழந்தையாயிருக்கும்பொழுது விளையாட்டாக அக்கூனியினுடைய கூனல் முதுகின்பேரில் வில் உண்டைகளால் அடிப்பார். அந்தக்கோபத்தை கூனி மனதிலே வைத்திருந்தாளாதலால் இராமருடைய பட்டாபிஷேகத்தைக் கலைக்கஎண்ணினள்.

ஆதலால் கைகேயிடம் இராமருடைய பட்டாபி ஷேகத்தின் பின்பு அவளும், அவள் மைந்தன் பரதனும், கோசலைக்கும் இராமனுக்கும் அடிமைகளாக நேரிடும் என்று பலபடக்கூறி, கைகேயி ராமனிடம்கொண்டிருந்த அன்பை வெறுப்பாக மாற்றினாள்.

'கரைத்தால் கல்லும் கரையுமல்லவா?' நம் பத்தக்க பலவார்த்தைகளால் கூனி பேசவே, கைகேயி ராமரிடமும் கௌசலையிடமும் பெரிதும் வெறுப்புக்கொண்டாள். உடனே இராமனைக் கெடுக்கும் வகையைக் கூறுமாறு கூனியிடம் கேட்டாள்.

முன் ஓர் சமயத்தில் தசரதர் கைகேயிக்கு இரண்டு வரங்கள் வழங்கியிருந்தார். அவற்றை இப்பொழுதே கேட்க உற்ற சமயம் என்றும், அவற்றுள் ஒன்றால் இராமனை பதினான்கு வருஷங்கள் காட்டில் வசிக்கச்செய்து மற்றொன்றால் பரதனுக்கு பட்டம் கட்டுவித்தலே முறையென்றும் கூறினாள். கைகேயியும் அதற்கு இசைந்தாள்.

இராமருக்கு பட்டாபிஷேகம் ஓர் சுபதினத்திற் குறிக்கப்பட்டது. அந்த தினத்திற்கு முதல் நாள் தசரதர் கைகேயியின் மாளிகைக்கு வந்தார். அப்பொழுது அவள் மிகவும் கோபமாயிருந்தது

கண்டு அவளைசமாதானம் செய்யவிரும்பியதசரதர் அவள் யாதுவிரும்பினும் அளிப்பதாய்வாக்களித் தார். உடனே கைகேயி கோபம் தணிந்து தன க்கு முன் வழங்கியிருந்த இரண்டு வரங்களையும் கொடுக்கும்படி கேட்டாள். தசரதரும் அதற்கு இசைந்தார். உடனே தன் மகன் பரதனுக்கு முடி சூட்டவேண்டும் என்றும்; இராமனை பதினன்கு வருஷங்கள் காட்டில் வசித்து வரும்படி ஆக்ஞா பிக்கவேண்டுமென்றும் கூறினள். இதைக்கேட் டதும் தசரதர் இடியொலிகேட்ட பாம்புபோல் நடுங்கினர்; அவர் கைகேயியை அவள் கொண்ட தீய எண்ணத்தைவிட்டு விடுமாறு எவ்வளவோ வேண்டியும் அவள் அதற்கு சிறிதும் இணங்க வில்லை. பின்னர் தசரதர் மூர்ச்சையுற்று விழுந்து கிடந்தார்.

பின், கைகேயி தானே இராமனை அழைத்து,

“ஐய! நின் அருமைத்தாதை அளித்ததோர் ஆணையுண்டு
வெய்யகானக நீ மேவி விரிஞ்சனோர் முனிவர்த்தாழ்ந்து
வுய்யெனப் பதினலாண்டு ஒழித்திட பின்னர் உம்பி
கையதாம் புவியைத்தாங்கிக் கழித்திடவென்று மன்னே”

என்று கூறினள். அப்பொழுது இராமன் தாயைப் பணிந்து ‘தாயே இது அரசனணையே யல்லாமல் உம்மாணையாயினும் மறுப்பேனு?’ இதோ வனம் செல்கின்றேன் என்று கூறி மூர்ச்சையுற்றுக் கிட

க்கும் தந்தையையும் வருந்திய மற்றைத் தாய்மாரையும் வணங்கி சீதையுடனும் லக்ஷ்மணனுடனும் வனம் ஏகினர்.

வனத்திற்கேகிய ஸ்ரீராமருக்கு, பலவிதமான துன்பங்கள் ஏற்பட்டன. ஸ்ரீராமர் தமது வல்லமையால் அவற்றையெல்லாம் நீக்கிக்கொண்டார். சின்னாட்களில் அவரது மனைவி சீதையை ராவணன் என்னும் அரக்கன் கவர்ந்துசென்றான். இராமன், சுக்ரீவன் என்னும் குரங்கரசனை சிநேகம் செய்துகொண்டு மாருதி முதலிய தலைவர்களைத் துணைக்கொண்டு இராவணனை மாய்த்து தம் மனைவியை மீட்டு தந்தை தாய் ஆணைப்படியே பதினான்கு வருஷம் காட்டிற் கழித்த பின் வந்து அயோத்தியை யாண்டனர்.

நீதி:

"புதல்வர்க்கு தெய்வம் தந்தையும் தாயும்".

—நீதிநெறிவிளக்கம்.

## துருவன்.

உத்தானபாதன் என்னும் ஓர் மன்னன் முன் காலத்தில் நமது பாரத தேசத்தில் ஆட்சி புரிந்துவந்தான். அவனுக்கு மனைவியர் இருவர். மூத்தவள் பெயர் சுநீதி. இளையவள் பெயர்சுருசி. இருமனைவியர் கொண்டவர்க்கு இளையாள்மேல் விருப்பம் விழுவது சகஜமல்லவா? அதுபோலவே உத்தானபாதனும் சுருசியிடம் அதிக விருப்பும், சுநீதியிடத்தில் அதிக வெறுப்பும் காட்டத் தொடங்கினன்.

நாளடைவில் சுருசிக்கு உத்தமன் என்ற ஒரு புதல்வனும், சுநீதிக்கு துருவன் என்ற புதல்வனும் பிறந்தனர். துருவன் மிக அமைதியும் அடக்கமும் வாய்ந்தவன். உத்தமன் அதிக கர்வம் வாய்ந்தவன். ஓர் நாள் உத்தானபாதன் தன்மனைவி சுருசி அருகில் நிற்கத்தான் மஞ்சத்து உல்லாசமாய் வீற்றிருந்தான். அச்சமயம் சுருசி புதல்வனுகிய உத்தமன் விரைவாயோடி அரசனது மடியில் அமர்ந்தான். அச்சமயம் அந்த உத்தமனுடன் விளையாடிக் கொண்டிருந்த துருவனும் உத்தமனைப்போலவே தந்தை மடியிலேறியமர ஓடினன். உண்மையில் அரசனுக்குத் தன் குமாரனுகிய துருவனை எடுத்து மடியிலமர்த்திக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் இருந்ததாயி

னும் சுருசி அருகிலிருந்தமையால் அவ்வாறு செய்யவில்லை. உத்தமனே தன்னைப்போல் தந்தை மடியில் அமர முயற்சி செய்யும் துருவனை நோக்கி 'ஏ மூடா! இங்கே வராதே' என்றான். உடனே சுருசி துருவனைப் பெரிதும் வெகுண்டு நோக்கி "அடா அறிவிலி! அதிருஷ்டங்கெட்ட நாயே! நீ தந்தை மடியிலமரும் பாக்கியம்பெற்றவனனால் என் வயிற்றிலல்லவோ பிறந்திருக்க வேண்டும். எனது மாற்றாள் வயிற்றிற் பிறந்த மஹா மூடா! நீ அவ்வாறு முயற்சிப்பது சிங்கம் அரசு செய்யுமிடத்தில் நாயும் அரசுசெய்ய விரும்புவதை யொக்கும். சீ! நீ ஏகுவெளியே" என்று பலமொழிகள் புகன்றாள். தன் குழந்தையை கர்வத்தால் பலவாறு சுருசி தூஷிப்பதைக்கேட்டும் அவள் மீதுள்ள அன்பின் மிகுதியால் குழந்தையாகிய துருவனை யெடுத்துக் கொள்ளாமலும், அவள் அவ்வாறு மொழிந்ததைத் தடுக்காமலும் இருந்துவிட்டான்.

துருவன் சிறுவனே யாயினும் அதிக புத்திசாலியாகையால் தன் தாய் புகன்ற மொழிகளில் மிகவெறுப்பும், கோபமும், துக்கமுமடைந்தான். தன் தந்தை வாய் வாளாமை மேற்கொண்டிருப்பதைக் கண்டதும் அவனது துக்கம் அதிகரித்தது. கண்களிலிருந்து நீர் ஆறாகப்பெருகி யோ

டிற்று. விம்மி விம்மி யழுதுகொண்டே சிறிது நேரம் அங்கு நின்றுகொண்டிருந்தான். குழந்தை யழுவதைக் கண்ணுற்றிரங்காத கன்மனமு முண்டா? ஆனால் சுருசியேனும் உத்தானபாதனேனும் சிறிதும் மனம் இரங்கவில்லை.

தன்னை யொருவரும் கவனிக்கவில்லை யென்றுகண்ட துருவன் அழுதுகொண்டே தன் தாயாகிய சுநீதியிடம் வந்து சேர்ந்தான். தன் மகன் தாரை தாரையாய்க் கண்களிலிருந்து நீரைப் பெருக்கிக்கொண்டு நிற்பதைக்கண்ட சுநீதி, "என்னப்பனே! உனக்கு நேர்ந்த குறைவென்ன? யாரேனும் உன்னை அடித்தார்களா? ஏளனம் பண்ணினார்களா? ஏன் இவ்வாறு அழுகின்றாய்?" என்று வினவினாள். அப்பொழுது துருவன் தன் தாயிடம் நடைபெற்ற விஷயங்கள் யாவற்றையும் நவின்றான்.

உடனே சுநீதியின் கண்களினின்று முத்துத் தொடர்போல் நீர்த்துளிகள் பெருகலாயின. ஆயினும் அவள் மென்மேலும் அதிகப்படும் தனது துக்கத்தை யடக்கிக்கொண்டு தன் குழந்தையை நோக்கி "என் அருமைப்புதல்வ! நீ சிறுவனேயாயினும் மஹா புத்திசாலி. நீ என் வயிற்றிற் பிறவாமல் சுருசியின் வயிற்றி லுதித்திருந்தால்

மிக்க மேன்மை யடைவாய். என்னாலேயே உன க்கு இவ்வளவு இழிவுங் கிடைத்தது. நான் பூர்வ ஜன்மத்திற்செய்த பாவத்தால் எனது புருஷன் என்னை வெறுத்திருக்கிறார். நீ செய்தபாவத் தால் என் வயிற்றுதித்து அவரது வெறுப்பிற்கு நீயும் பாத்திரனாயினாய்! ஈசுவரன் ஒருவனுண்டா னால் அவருனக்கு அருள் சுரக்கட்டும். எல்லாம் அவனருளேயன்றி வேறில்லை" என்று மொழி ந்தாள்.

உடனே துருவன் மறுபடியும் தன் தாயைப் பணிந்து "தாயே நீ சிறிதும் வருந்தவேண் டாம். நீ கூறிய அவ்வீசுரன் எங்கிருக்கின்றான் சொல். நான் சென்று அவனருளைப் பெற்று வருகிறேன்." என்று கூறினான். தன் மதலையது மழலைச் சொற்களைக்கேட்ட தாய் அவனை கைக ளாற்றூக்கி முத்தமிட்டு "குழந்தாய், அவ்வீசுரன் எங்குமிருப்பவன் தான் ஆயினும் உன்னைப்போ ன்ற சிறுவருக்குப்புலப்படுபவனல்ல. பெருமுனி வர்கள் பலர் அவனைத் தெரிசிப்பதற்காக பல தவமிழைத்து வருகின்றனர். அத்தகைய பக்தர் கட்கேயன்றி பிறர் கண்ணிற்கு அக்கடவுள் புல ப்படான். ஆகையின் குழந்தாய் அவனைக் காண் டல் எளிதன்று." என்று கூறினாள்.

உடனே துருவன் "தாயே நீ கூறிய அம்மு னிவர்கள் எங்கு தவம் செய்கிறுர்கள்? அவர்களை ப்பணிவேனுயின், ஈசனையடையும் வழியை அவ ர்கள் எனக்குப் போதிப்பினும் போதிப்பர். ஆகை யால் அவர்கள் எங்கு இருக்கிறுர்கள் என்றுகூறு', என வேண்டி நின்ருன். தன் குமாரனது உத்தம குணத்தையும், அவனது திடசித்தத்தையும் அறி ந்த சுநீதி மகிழ்ந்து "பால! நீ மிகச்சிறுவன். எப்படி நீ அவ்வளவு தூரம் நடந்துசெல்வாய்? உன்னுலியலாது முடியாத காரியங்களைச் செய்ய முயற்சிப்பதில் யாதும் பயனில்லை. அவர்கள் வடக்கே வெகுதூரத்திலுள்ள பர்வதங்களில் தவம்புரிகிறுர்கள் என்று பலர் சொல்ல நான் கேள்வியுற்றிருக்கிறேன். ஆனுல் அவர்களிருக் கும் இடத்தை நானும் செவ்வையா யறிந்த தில்லை" என்றுள். தாயே அப்படியாயின் நான் சென்று எவ்வாருயினும் அவர்களைக்கண்டு ஈசு ரனைத்தொழும் வழியை யறிந்துகொள்கிறேன். பின்னர் அவர்கள் கூறியவாறே புரிந்து ஈசனைக் கண்டு உனக்கும் எனக்கும் எந்தைக்கும் நன்மை யைத் தேடுகிறேன்" என்று துருவன் கன்மன மும் கரையும்படி கூறித் தாயை வணங்கி நிற்க, அவளும் குழந்தையின் முகக்குறியினுல் அவனு க்கு யாதொரு தீங்கும் நேராதெனை அறிந்து வி டைகொடுத்தனுப்பினுள்.

தாயிடம் விடைபெற்றுக்கொண்ட துருவன் வடதிசைநோக்கிப் புறப்பட்டான். போகும்வழியில் நாரதர் அவனுக்குப் பிரத்தியக்ஷமாகி ஆசீர்வதித்தனுப்பினர். கடைசியில் துருவன் முனிவர்கள் தவம்புரியுமிட மடைந்து அவர்களைப் பணிந்து தன் தந்தை செயல் முதல் யாவையும் கூறி ஈசுவரனையடையும் வழியைத்தனக்கு உபதேசிக்குமாறு வேண்டி நின்றான்.

ஐந்தாறு வயதுப்பாலகன், ஈசுரபக்திமேலிட்டுத் தங்களைப் பணிந்து நிற்கவும் முனிவர்கள் அவன்மீது இரக்கமும் ஆச்சரியமுமடைந்து, "குழந்தாய் பல நாட்கள் பசி தாகம் முதலியவற்றையும் மறந்து சர்வேசுரனாகிய நாராயணனைத் தோத்தரிக்கவேண்டும். அக்காலத்தில் சர்வேந்திரியங்களும் அந்நாராயணனுக்கே ஆளாயிருக்கவேண்டும். எவ்வளவுதான் இடையூறு நேரினும் மனம் வருந்தலாகாது.

அவ்வாறு தவம்புரிவது எம்போன்ற முனிவர்கட்கே மிகவும் அரிதாயிருக்க நீ எவ்விதம் புரிவாய்? மழலைமாறாச் சிறுவ! நீ இங்கேயே வேண்டுமானாலும் வசிக்கலாம். இன்னும்கொஞ்சகாலம் எங்களுடன் பழகிவந்தால் பின்னரே நீ தவம்புரிய யோக்கியனாவாய்" என்று கூறினர்.

உடனே துருவன் முனிவரைப் பணிந்து "அருந்தவ முனிவர்காள்! தங்களை நான் தரிசித்த மாத்திரையிலேயே என்னைப்பற்றிய பாவங்கள்யாவும் ஒழிந்தன. இப்பொழுது நான் தவம் புரிவதற்கு யோக்கியனுயிருக்கிறேனென்றே என் மனத்திற்படுகிறது. ஆகையின் தாங்கள் கூறிய வாறு தவம்புரியச் செல்கின்றேன். என்னை ஆசீர்வதித்தனுப்புக" என்று கூறினுன்.

உடனே முனிவர் அவனது திடசித்தத்திற்கு அவனைப்புகழ்ந்து "உனக்குக் கட்டாயம் கடவுள் அருள்புரிவார்" என்று ஆசீர்வதித்தனுப்பினர். துருவனும் முனிவரிடம் விடைபெற்றுத் தவம் செய்யத்தக்க இடம் நாடிச்சென்ருன்.

குளிர்ந்த நதிக்கரையில், மனிதரணுகாத சோலையொன்றே தான் தவம்செய்தற் கேற்றவிடம் என்று துருவன் கருதி அங்குக் கடுந்தவம் புரிந்தான். அவன் ஐம்புலன்களையும் ஒடுக்கிப் புரிந்த பெருந்தவத்தைப் பலவாறு தேவரும் முனிவரும் புகழ்ந்தனர்.

அவ்வாறு அவன் தவம் செய்கையில் பல விதமான இடையூறுகள் அவனுக்கு நேர்ந்தன. ஆயினும் அவன் ஒன்றையும் பொருட்படுத்தவில்லை. அநேக ஆண்டுகள் அவ்வாறே தவம் செய்து கழித்தான்.

கடைசியில் ஸ்ரீமந்நாராயணன் துருவனது தவத்திற்கு மகிழ்ந்து அவனுக்குப் பிரத்தியக்ஷமானார். சங்கு சக்கரந்தரித்த கரமுடையவராயும், நீலமேக நிறமுடையவராயும், சர்வாபரண பூஷிதராயும் தன் முன்னால் நிற்கும் பகவானைக்கண்டதும் துருவன் பணிந்தெழுந்து பலவாறு தோத்தரித்தான்.

நாராயணன், குழந்தையாகிய துருவனைத் தழுவி வாழ்த்தி, வேண்டியவரம் கேட்குமாறு கூறினார். துருவன் தந்தை தாய் தன்னை யிகழ்ந்ததைக்கூற, நாராயணன், "குழந்தாய்! உன்னை இகழ்ந்த உனது தாய் தந்தையர் இனி யுன்னைப் பெரிதும் மதிப்பர். நீயும் நெடுங்காலம் நீண்ட ஆயுளுடன் அரசுபுரிந்து, கடைசியில் அழியாப் பதவியும் பெறுவை" என்று வரமளித்து மறைந்தார். பின் துருவன் திரும்பிவந்து தாயை நமஸ்கரித்து, தந்தையாலும், பலராலும் புகழப்பெற்று வாழ்ந்தான். உத்தானபாதனும் தனது குற்றத்தையுணர்ந்து தன்னைத் தன் பிழைக்கு மன்னிக்குமாறு தன் புதல்வனை வேண்டிக்கொண்டான். துருவனும் தன் தந்தையைப் பணிந்து நின்றான். உத்தானபாதன் தனக்கு அழியாப்புகழுடம்பீந்த தன் புதல்வன் துருவனைத் தழுவி மகிழ்ந்தான்.

"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொலெனும் சொல்."-திருக்குறள்.

---

## பரசுராமன்.

பூர்வம் ஜமதக்னி என்றொரு பிராம்ஹண சிரேஷ்டருக்கு ராமன் என்றொருபுதல்வன் இருந்தான். அவன் மிக உத்தமன். தந்தை தாய் வாக்ய பரிபாலனம் செய்தலே புதல்வர் கடமை என்பதை மனத்துட்கொண்டவன். பிறவுயிர்களிடத்துக் கருணை பாராட்டுபவன். வேதவித்தாய் விளங்கியவன்.

ஜமதக்னியின் மனைவி மஹா உத்தமி; கற்பிற்கரசியென்று உலகத்தாராற் புகழப்பெற்றவள்; அவள் குளத்திற்கு ஜலங்கொணரக் கையில் பாத்திரம் கொண்டு செல்வதில்லை. கையில் மண்ணை யெடுப்பாள்; அவளது கற்பின் மஹிமையால் அம்மண் உடனே குடமாய்விடும். பின் ஜலம் கொண்டுவருவாள்.

இவ்விதம் அநுதினமும் செய்துவருகையில் ஓர் நாள் அவள் குளத்திற்கேகையில் கார்த்தவீரியன் என்னும் க்ஷத்திரியன் ஆகாயமார்க்கமாய்ப் போனான். அப்பொழுது அவனது உருவ நிழல் கீழே தென்பட அம்மாள் அதைக்கண்ணுற்று,

இத்தகைய அழகிய குமாரனும் உலகிலுளனோ என்று அதிசயித்து நின்ருள். உடனே அவளது கற்பின் மஹிமை கலைந்துவிட்டது. பின் குளத்திற்குச் சென்ருள்; மண்ணைக் கரங்களிலெடுத்தாள்; குடமாகவில்லை. அப்பொழுது தான் அந்த அம்மாளுக்கு பிற புருஷனது நிழலைக் கண்டு அதிசயித்தமை, தன் கலங்காக் கற்பு நிலைமைக்குப் பங்கமாயது என்பது விளங்கிற்று; மனங்கலங்கினுள். தன்னுயகனுக்குத்தெரிந்தால், தனக்குப் பெரிதும் துன்பம் நேரிடும் என்பதை யறிந்தவளாகையால் மண்ணையெடுத்துக் குடவடிவாய்ச் செய்தும் பார்த்தாள்; முடியவில்லை. நேரமும் ஆய்விட்டது. அம்மாள் வீடுசென்று கண் கசக்கி யழுதுகொண்டே யிருந்தாள்.

ஜமதக்னி திரிகாலமும் உணரும் ஞானி, ரிஷீஸ்வரர் ஆகையால் நேர்ந்ததியாதென வறிந்துகொண்டார்.

உடனே அவர் தன்னருமைக் குமாரனுகிய இராமனை யழைத்தார். இராமனும் விரைவின் எய்தித் தாதையைப்பணிந்து நின்ருன். உடனே முனிவர் “குழந்தாய்! முன் பின் யோஜியாது இதோ இருக்கும் கோடாரியைக் கொண்டுபோய் உன்தாயை வெட்டி மீள்க” என்று ஆக்ஞை யளித்தார்.

இராமன் காரணம் யாதெனவும் கேட்க வில்லை. தந்தையாணையே பெரிதெனக்கருதித் தாயைக்கொலைபுரியவும் துணிந்தான். என்னே அவனது மனோநிலை? உடனே தாயை பணிந்த வாறே ஆண்டிருந்த கோடரியை யெடுத்துக் கொண்டு விரைவாய்ச்சென்று வீட்டில் வருத்த முற்றனளாய் வீற்றிருக்கும் தாயை வெட்டி வீழ்த்தி தந்தைக்கு அதை அறிவித்தபின், தாயை யிழந்ததற்காகத் தளர்ந்து நின்றான். தன் உத்தம புத்திரனது உயர் குணம் முனிவர் மனத்தைப் பெரிதும் மகிழ்வித்தது. அவனது மனவாட்டத் தைக் கண்ணுற்ற முனிவர், அவனை மார்புறத் தழுவி "புதல்வ! நினக்கு யாது வரம்வேண்டி னும் கேள், கொடுக்கிறேன்" என்று சொன்னார். உடனே இராமன் தன் தாய் உயிருடன் எழுமாறு வேண்டி நிற்க, முனிவரும் அவ்வாறே வரமளித் தார். தாயும் எழுந்தாள். உடனே இராமன் அவ ளைத்தாழ்ந்து தன்னை மன்னிக்குமாறு கேட்டான் அவளும் அவனது உயர் குணத்தை மெச்சி அவனை வாழ்த்தினாள். பின் யாவரும் சுகமே வாழ்ந்தனர்.

நீதி: "தந்தைசொல்மிக்க மந்திரமில்லை"

---

# காங்கேயன்.

---

பூர்வம் நமது பாரத தேசத்தில் சந்தனு என்னு மன்னன் செங்கோல் செலுத்திவந்தான் அவன் தன் பிரஜைகளிடம் மிக்க அன்புடைய வன். அவர்கட்கு நேரும் ஐவகைப் பயங்களையும் ஒழித்து அன்புடன் அரிசு புரிந்து வந்தான்.

சந்தனு ஓர் நாள் வேட்டை யாடுதற்காக கங்கையை யடுத்துள்ள ஓர் காட்டிற்குச் சென்றுன் அங்கு நெடுநேரம் வேட்டையாடிப் பல துஷ்ட மிருகங்களையும் மாய்த்தபின், மிகுந்த களைப்பால் தான் மாத்திரம் கங்கைக்கரைக்குவந்து ஓர் மர நிழலிற்றங்கினுன்.

அத்தருணம்கங்காதேவி ஓர் அழகியபெண்ணுய் அரசனுக்கு எதிரில் உலவிக்கொண்டிருந்தாள். கங்கையைக் கண்டவுடன், அவள்மீது அரசனுக் குக் காதல் உண்டாயிற்று. உடனே அவன் கங்கையை யழைத்து, தன்னை மணம்புரியுமாறு அவளை வேண்டினுன், உடனே கங்கை "அர சே! நான் உம்மை மணப்பதில் யாதுந் தடை யில்லை. ஆனுல் எனக்குப் பிறக்கும் குழந்தைகளை யான் யாது செய்யினும் நீ பொறுத்திருக்கவே ண்டும். அவ்வாறு செய்வதினின்றும் நீர் என்

ளைத் தடுத்தீராலுல் உடனே உம்மைவிட்டு நான் நீங்கிவிடுவேன். இதற்கு நீர் இசைவீராயின் உம் மை நான் மணந்துகொள்ளுகிறேன்" என்று கூறினாள். அரசனும் அதற்கிசைய இருவரும் மணந்து இல்லறம் நடத்திவந்தனர்.

இவ்வாறு இல்லறம் நடத்திவரும் நாட்க ளில் கங்கைக்கு ஓர் புதல்வன் பிறந்தான்; உட னே அவள் அப்பிள்ளையை யெடுத்துச்சென்று கங்கை நதியிற் போட்டுத் திரும்பிவந்தாள். இவ் வாறு கங்காதேவி தனக்குப் பிறந்த ஏழு குழந் தைகளையும் நதியிற் போட்டுவிட்டாள்.

பின் கங்கைக்கு எட்டாவது குழந்தை பிறந் தது. அது மிகவும் லக்ஷணமாயிருந்தது. அக் குழந்தையையும் நதியிற் போடுவதற்காகக் கங் கை யெடுத்துச் செல்லுகையில், சந்தனு தடுத்து "தேவியே! ஏழு குழந்தைகளையும் நதியிற் போட்டுவிட்டாய். இதையாவது என்னிடம் கொடு" என்று கூறினான். உடனே கங்காதேவி "அரசே! நீ என்னைத் தடுத்தமையால் நான் இதோ உன்னை விட்டு நீங்குகிறேன். இக்குழந் தையையும் நான் எடுத்துச் செல்லுகிறேன். ஐந் நூறு ஆண்டுகள் கழிந்தபின் இவனை நீ யடை வாய்" என்று கூறிக் குழந்தையை யெடுத்துக் கொண்டு கங்காதேவி மறைந்தாள்.

184403

ஆறு ஆண்டுகள் கழிந்தன. பின் ஓர் நாள் அரசன் கங்கை நதியைக் குறுகியதும் நதியின் நடுவில் ஓர் சிறுவன் படுத்திருப்பதைக் கண்ணுற்ருன். சிறிது நேரத்திற்கெல்லாம் கங்காதேவி அச்சிறுவனை யழைத்துவந்து 'மஹாராஜ! இதோ நிற்கும் இவனே தமது புதல்வன். அழைத்துச் செல்க' என்று கூறி மறைந்தாள். அரசனும் அவ்வாறே குழந்தையை யழைத்து அவனுக்கு காங்கேயன் என நாமகரணம் செய்தான். விளையும் பயிர் முளையிலேயே தெரியுமல்லவா? காங்கேயன் குழந்தையாயினும் அப்பொழுதே அவனிடம் பல நற்குணங்கள் காணப்பட்டன. அவன்தன் தந்தைமொழிகளைச் சிரமேற்ருங்கி அவ்வாறே நடப்பான். பல சாஸ்திரங்களைச் சிறுவயதிலேயே கற்றுணர்ந்தான். தனுவைக் கையாளுவதில் தனக்கு நிகரில்லையெனப் பெயர்பெற்ருன். அரசு புரியும் முறைகளையெல்லாம் அவன் எளிதிற் கற்றுக் கொண்டான். இவ்வாறு வளர்ந்துவரும் இளவரசனைக் கண்ணுற்ற குடிகள் யாவரும் மிகவும் மகிழ்ந்தனர். சந்தனுவும்தன் மைந்தன் "இவன் றந்தை என்னோற்ருன் கொல்" எனும் இசைச் சொல்லைத் தனக்கு அளித்தமையால் மிக மகிழ்ந்திருந்தான்.

ஓர் நாள் அரசன் வழக்கம்போல் வேட்டையாடித் திரும்புகையில், செம்படவர்கள் மீன் பிடிப்பதைக் காண அங்குச் சென்ருன். அங்கு அருகிலிருந்த ஒரு குடிசையின் வாயிலில் நின்று கொண்டிருந்த மிக அழகியதோர் கன்னிகையைக் கண்ணுற்று, அவளருகு சென்று அவளது வரலாற்றை வினவினன்.

அவள் தான் ஒரு செம்படவனது மகளென்றும் தன் தந்தை வெளியே சென்றிருப்பதாகவும் கூற அரசன் செம்படவனது வரவை எதிர்பார்த்து அங்கேயே நின்ருன். சிறிது பொழுதிற்கெல்லாம் அவ்வழியே கருத்த மேனியும் சிவந்த கண்களும் செந்நிறம் படர்ந்த குஞ்சியும் உடைய ஒருவன் அக்குடிசைக்கு வந்தான். அவனே அக்கன்னிகையின் தந்தையாயிருக்கக் கூடுமென்றுணர்ந்த அரசன் அவனை நெருங்கி "ஐய! தங்கள் பெண்ணிற்கு விவாகமாய் விட்டதா?" என்று வினவினன்.

செம்படவன்:—" இல்லை. ஆகவேண்டிய சமயந்தான் இது"

அரசன்:—" நான் இந்நாட்டரசன் சந்தனு தமது பெண்ணை மணம் புரிய விரும்புகிறேன். தமது விருப்ப மெப்படியோ?"

அரசன் என அறியவும் செம்படவன் மிகவும் மரியாதையாய் "மஹாராஜா! என் பெண்

ளைத் தங்கட்கு மணம்செய்து கொடுப்பதில் எனக்குத் திருப்திதான். ஆனாலும் தங்கட்கு முன்னாலேயே விவாகமாயிருக்கிற தல்லவா?"

அரசன்:— "ஆம், எனக்கு ஒருபையனும் இருக்கிறான். அவன் மிகவும் உத்தமன்."

செம்படவன்:-"அவ்வா றிருக்கையில், நான் எவ்விதம் பெண் கொடுப்பது?"

அரசன்:—யாது தடை?

செம்படவன் :— "இப்பெண்ணிற்கும் தமக்கும் உதிக்கும் குழந்தைகளுக்குத் தாம் பட்டங்கட்டச் சம்மதித்தாலல்லாமல், இவளைத் தமக்கு விவாகம் செய்து கொடுக்கமுடியாது."

இம்மொழிகளைக் கேட்டதும் அரசன் சிறிதும் அங்குத் தாமதியாமல் அரண்மனைக்குத் திரும்பினான். தன் குமாரன் காங்கேயன் இருக்க முறையின்றி இனித்தான் மணக்கும் மனைவியின் புதல்வனுக்கு அரசையளிக்க அரசனுக்குச் சிறிதும் சம்மதமில்லை. செம்படவன் புதல்வியாகிய அக்கன்னிகையின் மீது அவன் தீராக்காதல் கொண்டிருந்தானாகையால், அவளை மணக்காத தாற் கவலையவன்மனத்தில்மிகுதியும்ஏற்பட்டது. ஆனால் அரசன் அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் தன்னாலியன்றவரை மறைத்தான்.

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்"

என்பதல்லவா பழமொழி. அரசன் எவ்வளவு தான் மறைத்தாலும் புத்திசாலியாகிய காங்கேயன் தன் தந்தையின் மனத்திற் பெருங்கவலை யொன்று ஏற்பட்டிருப்பதை மட்டும் தெரிந்து கொண்டான்; ஆயினும் அக்கவலையின் காரணத் தைமாத்திரம் அவன் அறிய இடமில்லை.

எந்நோயும் சீக்கிரம் தணிந்துவிடும். காம நோய் மாத்திரம் குன்றாது வளர்ச்சியடையுந் தன்மையது. அரசன் மனத்திலிருந்த கமா நோய் மென்மேலும் வளர்ச்சியடைந்து, நாள டைவில் பெரும் வியாதியையும் விளைத்துவிட் டது அதைக்கண்ட காங்கேயன் தன் தந்தை யிடம் சென்று பணிந்து "எந்தையே! தம்மனத் திற் கவலையேற்படக் காரணம் யாதென்று கூறுக; இதோ நான் அதைத் தீர்த்து வைக்கிறேன்" எனலும் அரசன் யாதுங் கூறாது வாளாவிருந் தான்.

பின்பு காங்கேயன், அரசனது சாரதிமூலம் தந்தையின் கவலையை யறிந்து அப்பெண்ணை எவ்விதமேனும் தன் தந்தைக்கு மணம் புரிவிக் கக்கருதினான். பிறகு காங்கேயன் அச்செம்படவ

னது குடிசைக்குச்சென்ருன். அரசகுமாரன் வந்திருப்பதையறிந்தசெம்படவன் அவனுக்குப்பல மரியாதைகளையும் புரிந்து வணங்கி நின்ருன்.

காங்கேயன் அவனை நோக்கி "ஐய! தமது கன்னிகையை எந்தைக்கு மண முடித்துத் தருவதில் தமக்குயாதுதடை" யென்று வினவ, செம்படவன் சந்தனுவிடம் கூறியவற்றையே புகன்ருன். உடனே காங்கேயன், "என் தந்தையிடம் தாம் அதைப்பற்றிக் கேட்கவேண்டாம். நான் இராஜ்யத்தை எனது சிற்றன்னைக்குப் பிறக்கும் குழந்தைகட்கே கொடுப்பதாய் சத்தியம் செய்கிறேன். இனியேனும் தமக்குச் சம்மதந்தானு?" என்ருன்.

செம்படவன்:— "தாம் மறுப்பினும் தமது புதல்வர்கள் இராஜ்யம் பெறுவதற்காக வியவகாரம் செய்யினும் செய்வர். அப்பொழுது என் பேரருக்கு அரசில்லாமற் போய்விடுமல்லவா?"

காங்கேயன்:— "ஆயின், நான் விவாகமும் செய்து கொள்ளுவதில்லை யென்று தேவரும் யாவரும் அறியச் சத்தியம் செய்கிறேன். எனது தந்தையின் மனக்கவலை தீர்ந்தாலே போதுமானது. அதுவே நான் கோருவது" என்று கையோச்சிக் கூறினன்.

இக்கொடிய சபதங்களைக் காங்கேயன் செய்யவும் அவனது பிதுர் பக்திக்கு வியந்த தேவர்கள் யாவரும் அவன்மீது பூமாரி பொழிந்தனர். மண்ணவர் புகழ்ந்தனர். இக்கொடிய சபதங்களைச் செய்ததினிமித்தம் காங்கேயனுக்கு "பீஷ்மன்" என்ற பெயர் அளிக்கப்பட்டது.

பின் செம்படவன் தன் பெண்ணாகிய மச்சகந்தியை அரசனுக்குக்கொடுக்கச் சம்மதித்தான். உடனே காங்கேயன் அவளைத் தந்தைக்கு மணம் புரிவித்து மகிழ்ந்தான். அரசனும் தன் உத்தம குமாரனைத் தழுவி மகிழ்ந்தானாயினும் அவன் செய்திருந்த பெரும் சபதங்கள் அரசன்மனத்தை விட்டகலவில்லை.

*நீதி:—"தந்தை நலமே தனயன் நலம்"*

---

## பூரு.

பசுவும் புலியும் ஒரு துறையில் நீர் குடிக்குமாறு, அமைதியாய் ஆட்சி புரிந்த இந்திய மன்னர் பலருள் யயாதி என்பவனும் ஒருவன். இவன் சந்திர வம்ஸத்தரசன். இவ்வரசனுக்கு தேவயானை என்றும் சன்மிஷ்டை என்றும் இரண்டு மனைவிகள் உண்டு. இவ்விருவருக்கும் பல புதல்

வர்கள் உண்டாயினும் சன்மிஷ்டையின் கடைக் குமாரனாகிய பூரு என்பவன் மிகவும் உத்தமன். மற்றவர்கள் அனைவரும் அயோக்கியர்கள்.

அரசன் சன்மிஷ்டையிடம் அன்புகொண்டொழுகுவதைக் காணப்பொறாத தேவயானை தன் தந்தையும் அசுரர் குருவுமான சுக்கிராசாரியரிடம் சென்று அரசன் பலபடத் தன்னையிகழ்ந்ததாய்க்கூற, அவர் உடனே அரசனிடம் வந்து "ஏ! மன்ன, என் மகளை நீ யிகழ்ந்தனையாதலின் கிழவுரு அடையக்கடவை" என்று சபித்தார். உடனே அரசன் சுக்கிரர் காலில் விழுந்து தானிழைத்த பிழைக்குத் தன்னை மன்னித்து, கொடிய சாபத்தை மாற்றவேண்டுமென்று பிரார்த்தித்தான். அப்பொழுது அவன்மீது இரக்கங்கொண்ட சுக்கிராச்சாரியார் "இப்பருவத்தைப் பெற்றுக்கொள்ள விரும்பும் எவருக்கேனும் இதை நீ அளிக்கலாம்" என்று சாபத்தை மாற்றியருளினர்.

உடனே மன்னன் கிழவனாயினன். வேறெவருக்கேனும் அதனைக்கொடுக்க விரும்பினன் யயாதி. கிழவரும் வாலிபதசையை விரும்புபவராயிருக்க, இளைஞர் யாரே கிழப்பருவத்தினை யேற்கத் துணிவர். ஆகையின் ஒருவரும் அதற்கிசையவில்லை.

உடனே யயாதி தன் புதல்வர்களுள் ஒவ்வொருவரையும் அழைத்து வினவத் துணிந்தான். முதல்வன் "தந்தாய் வயதுசென்ற நீயே இப்பருவத்தினை யேற்க இசையாவிடில் எங்ஙனம் என்னை வினவத்துணிந்தனை. உன் பேதை மதியை விடு" என்று கூறியகன்றான். இங்ஙனமே தன் மூன்று புதல்வர் கூறியதனால், யயாதி மற்றவர்களைக் கேட்கத்துணியவில்லை.

ஆனால் இவ்விஷயம் "பூரு" என்னும்யயாதியின் கடைப் புதல்வன் காதிற்கெட்டிற்று. அவன் தந்தையடையும் நன்மைகளையே தன்னுடையனவாகக் கருதுபவன் ஆதலால் விரைந்து தந்தையிடம் சென்று "எந்தாய்! தமது கிழவுருவை எனக்கீந்து தாம் இளம் பருவங்கொண்டு சுகிக்க" எனலும் அரசன் அடங்கா உவகை பூத்துத்தன் புதல்வனைத் தழுவிக் கூறுவான்; "குழந்தாய் உனது மூத்தார் பலரும் நான் அழைத்து இப்பருவத்தைச் சின்னாட்கள் ஏற்றிருக்கும்படி கேட்ட காலையில், தமது பல கடுமொழிகளால் நான் வெட்கப்படும்படி செய்தனர். அவ்விதமிருக்க, நீ வலுவில் வந்து இதனை யேற்றுக்கொள்ளுவதாய்க் கூறியதைப் பெரிதும் பாராட்டுகின்றேன். உனது உயர்குணம் உலகம் முழுதும் பரவி நிலைபெற்று நிற்கும் என்பதிற்றடையில்லை.

இக்கிழவுருவை நீ சின்னுட்களே தாங்கி நிற்க வேண்டும். பின்னர் நானே பழையபடி யேற்றுக் கொள்கிறேன்" என்று கூறிப்பலவாறு வாழ்த்தி அக்கிழவுருவைப் பூருவுக்கு ஈந்தான்.

பூருவும் மிகமகிழ்ச்சியுடன் அதையேற்றுச் சிலகாலம் வாழ்ந்தான். பின் யயாதி மறுபடியும் அதனைத்தானே ஏற்றுப் பூருவின் உயர் குணத்தைப்புகழ்ந்து, தனக்குப்பின் அவனையே அரசனுக்கினுன்.

பூருவும் தேவரும் புகழச் செங்கோல் செலுத்தி நெடுங்காலம் வாழ்ந்தான். அவனது வம்ஸத்தினர் பௌரவரெனெப் படுவர்.

நீதி:—"தந்தை தாய்ப்பேண்"

---

## மார்க்கண்டேயன்.

முன்னொரு காலத்தில் மிருகண்டு என்று ஒரு ரிஷி இருந்தார். அவருக்கு நெடு நாள் வரை புத்திரனில்லை. பின் அப்பாக்கியத்தைப் பெற வேண்டி ஈசுவரனைக் குறித்துத் தவம்புரிந்தார். அவர் தவத்திற்கு மெச்சிய சிவபெருமான் அவர் முன் தோன்றினுர். உடனே ரிஷி உளமகிழ்ந்தவ

ரைத் தோத்தரித்தார். ஈஸ்வரன் அவரை நோக்கி "உனக்கு நிரம்பிய அறிவுடையவனும் என்பால் அன்புடையவனும் அற்பாயுள் (16-வயது) உடையவனுமான புதல்வன் வேண்டுமா? அல்லது பூர்ணாயுளுடையவனும் அறிவில்லாத் துஷ்டனுமான ஒரு புதல்வன் வேண்டுமா?" என்று வினவினர்.

உடனே அம்மஹரிஷி அவரை வணங்கி "பூர்ணாயுளும் அறிவின்மையும் உடையபுதல்வன் எனக்கு வேண்டாம். அற்ப ஆயுள் உடையவனே யாயினும் அறிவுடையோனாகில் அவனையடைதலே எனக்குச் சிறந்த பாக்கியம்" என்றார்.

"பொற்பறி வில்லாத பலபுத்திரப்பே றெய்தலி
னோர் நற்புதல்வனைப் பெறுதல் நன்றாமே"

என்பது நாம் அறியாததன்றே. இதைக்கேட்டதும் ஈஸ்வரன் சந்தோஷமடைந்து அவ்வாரே வரமளித்து அந்தர்த்யான மாயினர்.

வரம் பெற்றதும் முனிவர் வீடுவந்து சேர்ந்தார். உடனே ரிஷிபத்தினி கர்ப்பந்தாங்கினாள்; பத்து மாதம் நிரம்பியதும் நல்லதோர் சுபதினத்தில் நிறைமதிபோன்ற முகமுடைய ஓர் புதல்வனைப் பயந்தாள். அவ்வாறு பிறந்த பிள்ளை

க்கு மார்க்கண்டேயனெனப் பெயர் சூட்டினர். குழந்தை நன்கு வளர்ந்து வந்தது. ஐந்து வயதானதும் தமது அருமைப் பாலகனுக்கு அக்ஷராப்பியாசம் செய்வித்து உபநயனம் முதலிய சடங்குகளேயும் ரிஷீஸ்வரர் முடிப்பித்தார்.

மார்க்கண்டேயனே கடவுளருளாற்பிறந்தவனகையின் கலேகள் பலவற்றையும் அதி இளமையிலேயே கற்றுக்கொண்டான். ஒழுக்கத்திற் சிறந்தவனுயிருந்தமையின் உலகத்தார் அனேவரும் அவனேப் புகழ்ந்து பேசத்தலேப்பட்டனர். தன் புதல்வனேச் சான்ருேனென உலகினர் புகழ்வதைக்கேட்ட அவன் தாயும் அவனே யீன்றபொழுதினும் பெரிதுவந்தாள். தந்தையும் தனக்குப்பெருமையளித்த தன் மைந்தனேப் பற்றிப் பெரிதும் மனமகிழ்ந்தார். இவ்வாறு உவகை கொண்ட இவர்கள் மனம் சிறிதும் கவலேயடையாதிருக்கவில்லே. தம்மகனுக்கு அற்ப ஆயுள் என்று கடவுள் அருளியதை யுன்னுந்தோறும் இருவரும் எல்லேயில்லாத் துயரத்தாழ்ந்தனர்.

குமரனுக்குப் பதினேந்து வயதாயிற்று. இதுகாறும் அவர்கள் இச்செய்தியை யவனுக்கறிவித்திலர். ஓர் நாள், குழந்தையின் இனிய மொழிகளேயும் நல்லொழுக்கத்தையுங்கண்ட மகரிஷியும்

அவர் தம் பத்தினியும் அவன்றன் அற்ப ஆயுளை நினைத்தவர்களாய்ப் பொறுக்கமாட்டாமல் கதறி யழ ஆரம்பித்தார்கள். இவ்வாறு தன் தாய் தந்தையர் வருந்துவதைக்கண்ட மார்க்கண் டேயன், தானும் மிகவருந்தி அவர்களிடம் சென்ருன். சென்றவன் அவர்கள் அழுததன் காரணத்தை வினவினன். பெற்ருேரோ அதை யவனிடம் கூற விருப்பமில்லாதவர்கள் போல மறைத்து வேறு வார்த்தைகளைப் பேசத்தொடங் கினர். குமாரனே அதை மறந்தானில்லை. அதைத் தெரிவித்தாலொழிய தான் ஆகாரமும் அருந்துவதில்லையென்று மொழிந்தான். பிள்ளை யினது பிடிவாதத்தைக் கண்ட அவனது தாய் தாங்கள் அவனைத் தவம்செய்து பெற்றதையும் அவனுக்கு ஈசனளித்த அற்பாயுளையும் அறிவித் தாள்.

இதை யறிந்த புதல்வன் எழுந்து தன் பெற்ருேரைப் பணிந்து அவர்கள் அதற்காக வருந்தவேண்டுவதில்லை யென்றும், தான் பூர்ணு யுளை ஈச்வரானுக்ரகத்தால் அடைந்து வருவ தாகவும் கூறி, அன்று முதல் பல சிவ ஸ்தலங் களுக்கும் சென்று, ஈசனைத் தொழுது வந்தான்.

நெடுநாள் பல ஸ்தலங்களையும் தரிசித்து, பின் காசி க்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்தான்.

அங்கு வந்தடைந்த அன்றோடு அவனுக்கு ஈசனளித்த நாள் முடிவுபெற்றது. அவன் வழக்கம்போல் ஸ்நானம் செய்து, உருத்திராக்கமாலை தரித்து, விபூதியணிந்து எம்பெருமான் திருமுன்னின்று பஞ்சாக்ஷரத்தால் அவனைத் துதித்துக் கொண்டிருந்தான்.

இஃது இவ்வாறிருக்க, இவனது உயிரைக் கவரவென்று காலனு லனுப்பப்பெற்ற தூதர்கள் பரமபக்தனுகிய இவனைத்தாம் அணுகொணுமையைத் தம் தலைவற்கறிவித்தனர். அதைக்கேட்டதும் காலன் தன் எருமைக்கடாவின் மீதிவர்ந்து இவனிருந்தவிடத்தை நோக்கிவந்தான். மார்க்கண்டேயன் பரமபக்தனுதலால் காலனது வரவை யுணர்ந்து அருகிலிருந்த சிவலிங்கத்தை தன்கரங்களாற் பற்றித் தழுவிப்பலவாறு துதித்துக்கொண்டிருந்தான். அருகடைந்த காலனோ, இவனது பக்தியைப் பெரிதெனக் கருதாமல், தன் பாசத்தாலவனைப் பிணிக்கக்கருதி அவ்வாறே செய்யத்தொடங்கினன். பாசத்தின் வலிமையைத் தாங்கமாட்டாத மார்க்கண்டேயன், ஓவென்று கதறவே அவ்விலிங்கத்தினின்றும் ஈச்வரன் வெளிப்பட்டார்,

வெளிப்பட்டதும் கோபாக்கினி கண்களிற் பறக்கக் காலனை விளித்து தன் பக்தனைப்பலவாறு

இழிந்ததற்காக அவனைப்பெரிதும் பழித்தார். காலனும் தனது அறியாமைக்காகப் பெரிதும் வருந்தினன். உடனே ஈச்வரன் தமது கோபத்தாற் காலனைக்கொன்று பின் அநேக தேவர்களின் வேண்டுகோளின்படி அவனுக்கு உயிர் தந்தருளினர்.

பின்னர் பகவான் தமது பக்தனுகிய மார்க்கண்டேயனை விளித்து "குழந்தாய்! யாதொன்றற்கும் வருந்தவேண்டாம். என்னை யடைந்தோர் ஓர் நாளும் இன்னலடையார்" என்று சொல்லி அவனுக்கு என்றும் அழியாத இளமையையும் அளித்தார். மார்க்கண்டேயர் ஈச்வரனைப் பலவாறு புகழ்ந்து விடைபெற்றுத் தன் பெற்றோரை யடைந்து அவர்களுக்கு மகிழ்ச்சியை யுண்டு பண்ணினர்.

நீதி:–'ஊழையும் வெல்லலாம் உரியமுயற்சியால்"

# மேகநாதன்.

---

இந்தியாவிற்குத் தென்பக்கத்திலுள்ளது இலங்கைத்தீவு. அதில் முன் காலத்தில் அரக்கர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களுக் கரசனு யிருந்தவன் இராவணன் என்னும் பெயரினன். இவன் பிரம்ஹ தேவனது பேரன். வேதமுதற் பல நூல்களையும் கற்றவன். மேலும் இவன் அரிய பல தவங்கள் இயற்றி பிரம்ஹதேவனிடம் பல வரங்கள் பெற்றிருந்தான். திக்குகளையெல்லாம் வென்றவனென்றால் இன்னும் இவனது வலிமையை யுரைப்பதேன்?

இராவணன் மிகுதியுங் கர்வங்கொண்டவன். அரக்கனுகையால் தேவரையும் முனிவர்களையும் பெரிதும் வருத்திவந்தான். ஆகையால் இந்திராதி தேவரும் இவனுக்கஞ்சியே வாழ்ந்து வந்தனர்.

இவன் தன் தீய காதலால் நெறிதவருத உத்தமனுகிய ஸ்ரீராமனது மனைவியும் லோக மாதாவுமான சீதையைக் கவர்ந்து வந்து, தன் கருத்திற் கிணங்குமாறு அவளை வேண்டினுன். அவள் இணங்காதது கண்டு பலவந்தப் படுத்தவுங் கருதினுன். அத்தருணம் எத்தனையோ

பெயர்கள் நற்குணமுள்ளவர்கள் தடுத்தனர், தான் நெருங்கினல் எங்கு சீதை மடிந்து விடுவாளோ என்ற பயத்தாலும் தனக்குமுன் பிரம்ஹதேவ ரீந்த ஒரு சாபத்தினலும் சீதையை பலாத்காரம் செய்யாமலிருந்தான்.

அநுமான் மூலம் சீதை இலங்கையில் அசோகவனத்தில் இருந்ததையறிந்த இராமன், பல படைகளுடனும் இலங்கையின்மேற் படையெடுத்து வந்தான். அப்பொழுது அவனுடன் போர் செய்து கும்பகருணன் முதலிய வலிய அரக்கர் பலர் மடிந்தனர். அவ்வாறு பலரும் இறந்தமையை யறிந்த இராவணன்தான் போர்க்கெழத் தயாராயினன்.

இராவணனுக்கு மேகநாதன் என்றொரு குமாரன் இருந்தான். அவன் பிறந்தவுடன் செய்த சப்தம் இடி முழக்கம் போன்றிருந்தமையால் அவனுக்கு அப்பெயர் இடப்பட்டது. இவன்தன் தந்தையைப்போலவே மிக்கவலிமையுடையவன், இந்திரனையும் ஓர் சமயம் வென்றுளைகயால் அவனுக்கு இந்திரஜித்தன் என்ற பெயரும் இடப்பட்டிருந்தது. இவன் தன் தந்தை போருக்கெழுதலைக்கண்டு "எந்தாய்! யான் சென்று அம்மனிதரைக்கொன்று திரும்பி

வருகிறேன். தாங்கள் சிறிதும் கவலைப்பட வேண்டாம்'' என்று கூறித் தான் போர்க்களமடைந்தான்.

மேகநாதன் மிகவும் புத்திசாலி. இராம லக்ஷ்மணர், வீரர் ஆச்சரியப்படத் தக்கவாறு போர்செய்ததைக் கண்டதும், அவர்கள் கடவுளினம்சம்தான் என்பதை மேகநாதன் தெரிந்துகொண்டு விரைந்து தன் தந்தையிடம் திரும்பி வந்தான்.

பாணங்கள் தைத்த புண்களிலிருந்து இரத்தம் பொழியத்தன் முன் வந்த புதல்வனைக்கண்டு, இராவணன், "அப்பா! ஏது உனக்கும் இவ்வளவு வருத்தம் சம்பவித்தது?'' என்றான்.

அப்பொழுது இந்திரஜித்தன் தன் பிதாவை நோக்கி "எந்தையே! இதுவரை பிறர்கூறிய மொழிகளில் நான் சிறிதும் நம்பிக்கைகொள்ளவில்லை. இன்று என்கண்களாலேயே கண்டேன் அவ்விராம லக்ஷ்மணர்கள் சாமான்ய மனிதர்களல்லர் என்பதை அவர்கள் போர்செய்யும் திறமையைக் கண்ணுற்றபொழுது அவர்களைக் கடவுளர் என்றே மதித்தேன். அதற்காக நான் அஞ்சினேனென்று நீர் கருதவேண்டாம். அவர்கள் மிகவும் உத்தமர்கள். இப்பொழுது நம்

குலத்தை எரிக்க இருக்கும் கற்புத்தழலாகிய அந்த சீதையைக்கொண்டு அவர்களிடம் ஒப்பு வித்தால் அவர்கள் திரும்பிவிடுவார்கள். நாம் செய்த தீமைகள்யாவற்றையும் பொருத்தருள்வர். ஆதலில் அவ்வாறே செய்தலே உசிதம் என என் புத்தியிற் படுகிறது. இவ்வளவும் எந்தையே! தம்முடைய நலத்தை நாடி நானுரைத்தனவே யன்றி வேறன்று" என்று கூறி வணங்கி நின் ருன்.

உடனே இராவணனுக்குக் கோபம் வந்து விட்டது. பின் அவன் தன் புதல்வனைப் பார்த்து "அடா! நீ சிறு பயலாகையிற் பயந்து விட்டாய். மனிதருக்கஞ்சித் திரும்பிய மைந்தா! நீ அவர் களைப் பெரிதும் புகழ்ந்ததுபோதும். உன் வீட் டிற்கேகிப் புண்களையாற்றி, சுகமாக இன்றைப் பொழுதைக் கழி. நான் சென்று அம்மனிதரை மாய்த்து வருகிறேன்" என்று கூறி, சாரதியைத் தேர் கொணருமாறு ஆஞ்ஞாபித்தான்.

மேகநாதன் மிகவும் உத்தம குமாரன்; தான் எவ்வளவு கூறியும் தந்தை யுணராமையால் அவ னுக்காகப் போர்செய்து உயிர் துறத்தலே தகுதி யெனக்கருதிவிட்டான். பின் அவன் தன்தந்தை காலில் விழுந்தெழுந்து "தந்தையே! என்மீது

கோபம் கொள்ளாதீர். உம்மீதுள்ள பிரியத்தினு லேயே நான் இவ்வளவுங் கூறினேனே யன்றி வேறில்லை. இதோ நான் போருக்குச் செல்கி றேன். நான் இறந்தபிறகாவது அம்மனிதர்களது வலிமையை யுணர்வீர்" என்று கூறித்தேர்மிசை யேறிப் போர்க்களத்திற்குச் சென்றான்.

அங்கு நெடுநேரம்வரை இந்திரஜித்தன் போர் செய்து கடைசியில் இலக்குவன் கையம்பால் மடிந்தான். நல்வழிப்படாத் தந்தைக் காகத் தன்னுயிரையும் இழந்த இந்த உத்தம குமாரனை அவ்வுயர்குணத்திற்காகப் புகழாதவர் யாருமில்லை.

*நீதி :*

"கருத்திலாத் தந்தைதீமை கருதினாலதனைக் காத்துத்
திருத்தலாமாகில் நன்று; திருத்துதல் தீராதாயின்
பொருத்தொரு பொருளுண்டாமோ பொருதொழிற் [குரியராகி
ஒருத்தரின் முன்னஞ்சாதல் மைந்தருக்குரிய தம்மா."

# வீதிவிடங்கன்.

---

திருவாரூர் என்பது ஒரு திவ்வியக்ஷேத்திரம். இதில் தியாகராஜப் பெருமான் கோயில் கொண்டெழுந்தருளியுள்ளார். அக்கடவுளுக்கு வீதிவிடங்கர் என்றவேறுதிருநாமமும் உண்டு. இலக்குமிதேவிக் குறைவிடமாகிய இத்திருவாரூரைத் தலை நகராகக்கொண்டு அரசு செலுத்தி வந்த சோழமன்னர் பலருள்ளும் மநு என்பவரும் ஒருவர். அவர் முறைசெய்து காப்பாற்றி வந்தமையாற் குடிகளனைவரும், அவரைத் தியாகேசப் பெருமான் என்றே கருதித்தொழுதுவந்தனர். அவர் அரசாக்ஷி செய்தகாலத்துக் குறையென்பது அந்நாட்டிற் குறைந்ததாயினும், ஏதேனும் குறை எவருக்கேனும் நேர்ந்தால் அதையரசற்கறிவிப்பதற்காக ஓர் மணி யரண்மனை வாயிலிற் றொங்கியது. அரசற்குத் தம் குறைகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புவோர் அம்மணியை யடிப்பார்கள்.

இம்மநுச் சோழற்கு ஓர் புதல்வனிருந்தான். அப்புதல்வனுக்கு வீதிவிடங்கன் என்று பெயர். மிக்க அழகும் உத்தம குணமுங்கொண்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமு

மாய் வளர்ந்துவரும் குழந்தையைக் கண்டு அரசன் எல்லையற்ற மகிழ்ச்சிகொண்டான்.

ஓர் நாள் இவ்வீதி விடங்கன் தியாகேசர் சந்நிதிக்கேகிக் கடவுளை வணங்கிவர நினைவுற்ருன். அரசகுமாரன் கோயிற்கேக இரதம்வந்தது குமரன் புறப்படுகையில் வாத்தியங்கள் பலமுழங்கின. இராஜ வீதியில் எள்ளிடவும் இடமில்லாமல், ஜனங்கள் கூடியிருந்தனர். இரதமும் புறப்பட்டது.

இத்தருணத்தில் புதிதாக ஈன்ற பசுவின் கன்று ஒன்று யாவர் கண்ணிலும் படாதபடி துள்ளித் தேர்ச்சக்கரத்தி லகப்பட்டிறந்தது. இறந்த கன்றினைக் கண்டதும் ஜனங்கள் யாவரும் திகைத்து நின்றனர். அக்கன்றின் தாயும் இறந்த தன் கன்றருகில் நின்று பரிதபிக்கத்தக்க நிலையிற் கதறிக்கொண்டிருந்தது.

இரதத்தின்மீதிருந்த வீதிவிடங்கன் இதனையறிந்தான். உடனே தனக்கு நேர்ந்த பழியையெண்ணி மூர்ச்சித்தான். பின் பலர் பல உபசாரம் செய்ய எழுந்து அழுதான். "ஐயோ எனக்கேன் இந்தப் பழிவந்துற்றது? இப்பெரும் பாதகத்தைச் செய்த யான் உயிர் வாழுதலுந் தகவோ?

தர்மம் வழுவாத மநுமன்னர் புதல்வன் பசுங் கன்றைக் கொன்முன் என்று உலக முழுதும் என்னை யேசுமே.

அதனுல் எந்தையின் குற்றமற்ற செங்கோ லும் பழிப்படையுமே. மகன், தந்தைக்குச் செய் யும் உதவியிதுதானே? என்முன். அவன் கன்றை யிழந்து வாடி நிற்கும் பசுவைப்பார்த்து "தாயே! உன் வயிறெரிய நீ கதறக்கண்டு நான் எவ்வாறு சகிப்பேன். உன் கன்று உயிருடன் எழுவதா யிருந்தால், அதற்குப் பதில் என்னுயிரையே கொடுக்கச்சித்தமாயிருக்கிறேன்." என்றுரைத்துச் சோர்ந்தான். அப்பொழுது அங்கிருந்த பலரும் அவனைத் தேற்றினராயினும் அவன் தேறவில்லை.

அரச குமாரன் இந்நிலையில் நிற்க, கன்றை யிழந்தபசு விரைந்துபோய் அரசனது அரண் மனைவாயிலில் ஆராய்ச்சிமணியைத் தன்கொம்பு களால் அசைத்து அடித்தது. அதுவரை அந் நாட்டில் அம்மணியோசைகேட்டிராத மன்னன் வாயிற்கு ஓடிவந்து பசுவின் தோற்றத்தைக்கண்டு கண்கலங்கி மந்திரிமாரைப் பார்த்தான்.

அப்பொழுது அநுபவமிக்க மந்திரியொரு வன், நிகழ்ந்ததைக் கூறினன். உடனே அரச னுக்கு மிகுதியுங் கோபமுண்டாயிற்று. தன் குமா

ரனைக்கொல்வதே அவனது செய்கைக்குத் தகுதியான தண்டனை யென்று கருதி அதைத்தன் மந்திரிகளிடம் கூறினான்.

மந்திரிகள் எவ்வளவோ தடுத்தும் அரசன் சிறிதும் சம்மதியாமல் தன்னருமைக் குமாரனைத் தேர்க்காலிலிட்டுக்கொல்ல நிச்சயித்து தன் குமாரனைக் கொண்டுவரும்படி சேவகர்களை யேவி விட்டுத் தான் இரதமூர்ந்து சென்றான். தன்னைக் கொல்லத் தந்தை நிச்சயித்ததை யறிந்ததும் புதல்வன் மிக்க மகிழ்ச்சியடைந்தான். தன் தந்தையின் நீதியை வியந்தான். தன் பாவம் கழிவதை யெண்ணிக் களிப்படைந்து, தானே விரைந்து வந்து தந்தையையும் தியாகேசரையும் பணிந்து, இரத சக்கிரத்தடியிற் படுத்துக் கொண்டான். அரசனும் இரதத்தைச் செலுத்தினான்.

ஜனங்கள் யாவரும் புதல்வனது உத்தம குணத்தையும், அரசனது செங்கோலையும் மெச்சினர். தியாகேசரும் அரசன் முன்றோன்றி அவனைப் புகழ்ந்தாசீர்வதித்து, குமரனுங் கன்றுமுயிர்த்தெழச் செய்து மறைந்தார். பின் அரசன் தன் குமரனைத் தழுவி மகிழ்ந்தான்.

# பிரஹ்லாதன்.

அசுரர்களுக் கரசனாகிய, ஹிரண்யன், அரசாக்ஷி புரிந்த காலத்தில் பூசுரர்களும் தேவர்களும் யாவரும் அவனுக்கு நடுங்கினர். அவன் தேவர்களுக்கும் அந்தணர்களுக்கும் இழைத்த தீங்குகள் எண்ணிறந்தன.

அக்காலத்தில் மூன்று தேவர்களுடைய நாமமும் ஒழிந்தது. வித்தியாப்பியாசம் செய்யும் சிறுவர்முதல்யாவரும் "ஹிரண்யாய நம:" என்று கூறுவரே யல்லாமல் வேறு விதம் மொழியத் துணியார். தவறி ஈசுவர நாமத்தைக் கூறினால், உடனே அவர்களை ஹிரண்யன் கொன்று விடுவான். அவன், தவம் புரிந்து, ஈசுவரனிடத்தில், பல வரங்களும் பெற்றிருந்தானாகையால் யாவரும் அவற்கஞ்சினர்.

இந்த ஹிரண்யனுக்கு ஓர் குமாரன் பிறந்தான். அவனுக்கு ஹிரண்யன், பிரஹ்லாதன் எனப்பெயர் சூட்டினான். குழந்தை, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்வளர்ந்து வந்தது. ஐந்து வயதானதும், ஹிரண்யன் தன் புதல்வனை வித்தை கற்றுக்கொள்ளும்படி, சாஸ்த்ரஞ்ஞனாகிய ஓர் அந்தணனிடம் ஒப்புவித்தான்

குழந்தைக்கு வித்தியாப்பியாசம் செய்விக்க அந்தணன் ஆரம்பித்தான். முதலில் அவன், "குழந்தாய்! முதல் முதல் ஹிரண்யாய நம: என்று கூறு" எனலும் சிறுவர் தனது இருசெவிகளையும் மூடிக்கொண்டு "பெரியவரே! என்னை இவ்வாறு கூறினீர்? உலக முழுவதும் வியாபித்திருப்பவனாகிய ஸ்ரீமந்நாராயணனது நாமம் இருக்க அதனைக் கூறாது இதனைப் புகல்வது எதற்காக? விரும்பியவருக்கு விரும்பியவற்றை யளிக்கும் அஷ்டாக்ஷரத்தையே முதன் முதற் கூற வேண்டும்.

"காமம் யாவையுந் தருவது மப்பதங் கடந்தாற்
சேம வீடுறச் செய்வதும் செந்தழன் முகத்த
வோம வேள்வியி னுறுகத முய்ப்பது மொருவன்
நாம மன்னது கேள் நமோ நாராயணாய."

என்று அவ்வஷ்டாக்ஷரத்தின் பெருமையைப் பலவாறு புகழ்ந்து நின்றான்.

சிறுவன் கூறிய இம்மொழிகள் அந்தணன் காதில் காய்ச்சின நாராசம்போற் பாய்தலும், அவன் குழந்தையை நோக்கி "அட கெடுவாய்! உன்னையுங் கெடுத்தனை; என்னையுங் கெடுத்தாய். இப்பொழுது தேவர் முதல்யாவரும் கடவுளினும் சிறந்தவனாக உந்தையையே கருதி யிருக்கின்றனர்.

ஆதலின் இப்பொழுது யாவரும் அவரது நாமத்தையே துதிக்கின்றனர். அதைவிட்டு வேறு நாமங்களைப் புகல்பவன் உந்தையின் கோபத்திற்குப் பாத்திரனாகிறான். ஆகையின் நீ முன்கூறிய நாமத்தை விடுத்து உந்தையின் பெயரைக் கூறுக" என்று உரைத்தான்.

உடனே பிரஹ்லாதன் தன் ஆசிரியரை நோக்கி "ஐய! நீர் யாது கூறினும் சரி. அந்த ஒருவனாகிய நாராயணனது பெயரைத்தான் நான் புகல்வேனேயன்றி வேறு நாமத்தையென் நா மொழியாது; செவியுங் கேட்காது" என்று கூறலும், அந்தணன், இடியொலிகேட்ட அரவம் போல் நடுநடுங்கி, "அப்பா! இத்தருணம் என்னை நீ கெடுத்துவிடக்கூடாது; காத்தருளவேணும்" என்று கூறினான்.

உடனே சிறுவன் "அந்தணரே! என்ன இவ்வாறியம்பினீர். நாராயணா என்னும் இந் நாமத்தின் பெருமையை நீர் அறிந்திலீர் போலும்.

"குலந்தருஞ் செல்வந் தந்திடு மடியார்
படுந்துய ராயின வெல்லாம்
நிலந் தரஞ்செய்யும் நீள் விசும்பருளும்
அருளொடு பெருநில னளிக்கும்

வலந்தரு மற்றும் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான் கண்டு
கொண்டேன் நாராயணு வென்னு நாமம்."

என்னும் அருமையான வாக்கை யறியாத நீர் எம்போலியருக்கும் போதிக்க எவ்வாறு துணிந்தீர். இந்நாமத்தைக் கூறுவதனுல், உம்மையுய்வித்தேன், எந்தையை உய்வித்தேன். என் இந்த வுலகம் முழுவதையும் உய்வித்தவனுகிறேன். அவ்வாறிருக்க, தம்மை யான் கெடுத்தது எங்ஙனம்? "என்று வினுவிப்பணிந்து நிற்கும் சிறுவனே, கண்ணீர் பெருக அந்தணன் நோக்கி, "குழந்தாய்! நீ ஈசுவராம்ஸமாய்த் தோற்றுகின்ருய். நீ கூறும் அந்நாமத்தின் பெருமையை நானும் உணர்வேன். உலக முழுவதும் அறியும் ஆயினும் யாவரும் உன் தந்தைக்குப் பயந்தே அந்த நாமத்தைக் கூரு தொழிந்தனர். நீ இவ்வாறு கூறுவதை, உன் தந்தை அறிவாராயின் நானே உனக்கு அந் நாமத்தைக் கற்பித்தேனென்று கருதி யென்னைக் கொல்வான். நீயே, நான் கொலையுண்பதற்குக் காரணமாவாய். கொடிய பிரம்மஹத்தி உன்னையே சூழும். ஆதலால் இனியேனும் ஹிரண்யாய நம: என்று கூறு என வணங்கி நின்ருன்.

184403 சென்னை

உடனே சிறுவன் அவனை நோக்கி, "குருவே! நீர் சிறிதுங் கவலையுறவேண்டாம். நான் என் தந்தையிடம் நீர் கற்பிக்காமலே நான் இந்நாமத்தைப் புகல்வதாய் உருசுப்படுத்திக் கொள்ளுவேன். உமது உயிருக்கு யாதொரு அபாயமும் இல்லை. எனக்கு என்ன தான் ஆபத்து நேர்ந்தாலும் அப்பெருமானது நாமத்தைத் தவிரப் பிறிதொன்றும் புகலேன்." என்று உறுதியாய்க் கூறி நின்றான்.

யாது செய்வான் அந்தணன்? உடனே குழந்தையை அழைத்துக்கொண்டு அரசவை சார்ந்தான். அந்தணன் குழந்தையுடன் வருவதைக்கண்ட ஹிரணியன், விரைந்து சென்று குழந்தையைத்தழுவி, அந்தணனிடம் குழந்தை கல்விகற்ற முறையை வினவினான்.

அந்தணனது மெய்யில் நடுக்கங்கண்டது. நாதழுதழுத்தது. இந்நிலைமையில் அவன் "மகாராஜா! என்னென்று சொல்வேன். நான் என்னதான் கூறியும் கேளாமல், தமது புதல்வன் தேவரும் யாவருங் கூற அஞ்சும் ஒரு நாமத்தைப் புகன்றான். அந்நாமம் என் செவிகளில் பேரிடி போல் விழுந்தமையால், அவனை யழைத்துக் கொண்டு இங்கு வந்தேன்" என்று கூறினான்.